பக்கங்கள் 16 + 04

மாலை முரசு
கனடா முரசு இணைப்பு

## மேல் அதிகாரியை தாக்கிய தாதி கைது

(த.சுபேசன்)

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையின் மேல்நிலை அதிகாரி ஒருவரை வைத்தியசாலையில் கடமை நேரத்தில் வைத்து தாக்கிய 04▶

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 சித்திரை 23 திங்கட்கிழமை 06.05.2024 அதிர்வு 280

# தெல்லிப்பழை பெண் மரணம்: மாயமான மகன் இன்று கைது!



04▶

# சகல வேட்பாளர்களையும் எதிர்கொள்ள நான் தயார்

## மக்கள் என் பக்கம் என்று சஜித் சூளுரை

"எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எத்தனை வேட்பாளர்கள் என்னை எதிர்த்துப் போட்டியிட்டாலும் அத்தனை வேட்பாளர்களையும் எதிர்கொள்ள நான் தயாராகவுள்ளேன்."

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரான எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். 04▶



# பொலிஸார் முன்னிலையில் தாக்கப்பட்ட குடும்பஸ்தருக்கு நீதி வேண்டும்

## சந்தேகநபரைக் கைது செய்யுமாறு கோரி வவுனியாவில் போராட்டம்




(வவுனியா விசேட நிருபர்)

வவுனியா, புளியங்குளம் பொலிஸ் நிலையத்தில் பொலிஸார் முன்னிலையில் குடும்பஸ்தரைத் தாக்கிய நபரைக் கைது செய்யுமாறு கோரி வவுனியா – கண்டி வீதியில் அமைந்துள்ள சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம் முன்பாக இன்று கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தாக்குதலுக்குள்ளான நபர் உட்பட 40 இற்கும் மேற்பட்டோர் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர், "பொலிஸார் 04▶

# வவுனியா பொலிஸாரால் மருதங்கேணியில் 30 கிலோ கேரள கஞ்சா மீட்பு; இருவர் கைது!

(கே.வசந்தன்)

வவுனியா பொலிஸாரால் யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்ட திடீர் விசேட நடவடிக்கையின்போது 30 கிலோ 500 கிராம் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளதுடன், இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் போதைப்பொருள் கைமாறுவதாக வவுனியா விசேட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் வவுனியா பொலிஸ் நிலைய போதைப்பொருள் 04▶



# இந்திய கடற்பரப்பில் கைதாகி விடுவிக்கப்பட்டுள்ள ஐந்து மீனவரையும் நாட்டுக்கு அழைத்து வாருங்கள்

## நடவடிக்கை எடுக்கக் கோருகிறார் வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் ஆலம்

(மன்னார்)

இந்திய கடற்பரப்பில் நுழைந்த நிலையில் கைது செய்யப்பட்டு தற்போது விடுவிக்கப்பட்டுள்ள 5 மீனவர்களையும் நாட்டுக்கு அழைத்து வர கடற்றொழில் அமைச்சர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதுவரை எவ்வித முனைப்பு காட்டவில்லை. அவர்களை நாட்டுக்கு அழைத்துவர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் என்.எம்.ஆலம் குற்றம் சுமத்தியுள்ளார். தெரிவித்துள்ளார்.

இன்று திங்கட்கிழமை (06) காலை மன்னாரில் உள்ள அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய கடற்பரப்பில் நுழைந்த நிலையில் கைது செய்யப்பட்டு தற்போது விடுவிக்கப்பட்டுள்ள 5 மீனவர்களின் நிலை தொடர்பாக இந்த ஊடக சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதி தலைமன்னாரில் இருந்து கடற்தொழிலுக்கு சென்ற 05 கடற்தொழிலாளர்கள் தமிழக கடலோரக் காவல் படையினரால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு, வழக்கு விசாரணைகள் இடம் பெற்று வந்தன. இந்த நிலையில் கடந்த 2 வாரங்களுக்கு




முன்னர் அவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

எவ்வித குற்றச்சாட்டுக்களும் சுமத்தப்படாத நிலையில் அவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர். மீன்பிடியில் ஈடுபட்ட போது கடலில் ஏற்பட்ட சீரற்ற காலநிலை காரணமாக அவர்களின் படகு அங்கு ஒதுங்கியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மீனவர்கள் 5 பேரும் கைது செய்யப்பட்ட காலம் முதல் அவர்கள் விடுவிக்கப்பட்ட காலம் வரை சுமார் 6 மாதங்கள் அவர்கள் தொடர்பான எவ்வித நடவடிக்கைகளையும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கடற்றொழில் அமைச்சர் என எவரும் அக்கறை செலுத்தியதாக தெரியவில்லை.

தமிழக மீனவர் ஒருவர் இலங்கையில் கைது செய்யப்பட்டிருந்தால் அல்லது பாதிக்கப்பட்டிருந்தால் தமிழகத்தில் இடம் பெறுகின்ற போராட்டங்களும், தமிழக அரசு மற்றும் அங்குள்ள இந்திய துணை தூதரகங்கள் காட்டும் முனைப்பு எமது மீனவர்களுக்கு இவ்வாறான நிலை ஏற்படுகின்ற போது இங்குள்ள அரசியல் பிரதிநிதிகளால் எவ்வித முனைப்புக்கள் காட்டப்படுவதில்லை.

இந்த 5 மீனவர்களும் விடுவிக்கப்பட்டு இன்று இந்தியாவில் உள்ள எம்மோர் என்று அழைக்கப்படும் புத்த கோவில் பகுதியில் இலங்கை துணைத் தூதரகத்தால் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.ஆனால் அவர்களை இலங்கைக்கு அழைத்து வரும் நடவடிக்கைகளை இதுவரை முன்னெடுக்கப்படவில்லை. இவர்களில் மூவர் திருமணம் செய்த வர்கள் இருவர் திருமணம் முடிக்காதவர்கள். அவர்களின் குடும்பங்கள் இங்கு பல்வேறு பொருளாதார நெருக் கடிகளுக்கு முகம் கொடுத்து வருகின்றன.

அவர்களின் குடும்பங்களை சந்தித்து அவர்களின் தற்போதைய நிலையை எவரும் கேட்டறிந்தாதாகத் தெரியவில்லை. வடபகுதியில் உள்ள ஒவ்வொரு மீனவரின் நிலையும் இவ்வாறே அமைந்துள்ளது. யாருமே அவர்கள் மீது அக்கறை செலுத்துவதில்லை.

எனவே தற்போது அங்குள்ள மீனவர்களின் நிலையை கருத்தில் கொண்டு, கடற்றொழில் அமைச்சர் மற்றும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் துரித நடவடிக்கையை முன்னெடுத்து அவர்கள் 5 பேரையும் உடனடியாக நாட்டுக்கு அழைத்து வர நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.– என்றார்.






# இலங்கை வங்கி சேமிப்பு பிரிவுகள் பாடசாலைகளில்

(தலவாக்கலை)

இலங்கை வங்கி தலவாக்கலை கிளையின் ஊடாகத் தலவாக்கலை புனித பத்திரிசியார் கல்லூரி மற்றும் தலவாக்கலை தேசிய பாடசாலைகளில் இலங்கை வங்கி சேமிப்பு பிரிவுகள் திறக்கப்பட்டன.

இலங்கை வங்கியின் நுவரெலியா பிரதேச பிராந்திய முகாமையாளர் பி.விஸ்வநாதன் மற்றும் இலங்கை வங்கி தலவாக்கலை கிளை முகாமையாளர் எம்.இராமன் ஆகியோரால் இந்த சேமிப்பு பிரிவுகள் திறந்து வைக்கப்பட்டன.

மாணவர்களின் சேமிப்பு திறனை ஊக்குவிக்கும் முகமாக இந்த சேமிப்பு பிரிவுகள் பாடசாலைகளிலேயே திறந்து வைக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.




# திருகோணமலை வைத்தியசாலையின் குறைபாடுகளை நிவர்த்தி செய்யுங்கள்

## செல்வராசா கஜேந்திரன் எம்.பி. தெரிவிப்பு

(ஹஸ்பர் ஏ.எச்.)

திருகோணமலை மாவட்ட பொது வைத்தியசாலை பல குறைபாடுகளுடன் இயங்கி வருகிறது. இதனைச் சுகாதார அமைச்சு உடனடியாக சீர் செய்து கொடுக்க வேண்டும்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். கஜேந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு இன்று (06) கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

இந்த விஜயத்தின் போது கட்சியின் மாவட்ட பொறுப்பாளர் க.குகனும் உடனிருந்தார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே செல்வராசா கஜேந்திரன் எம்.பி. மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

கடந்த இரண்டரை மாதங்களுக்கு முன்னர் எமது கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க விஜயமொன்றை மேற்கொண்டு வைத்தியசாலையின் குறைபாடுகள் தொடர்பில் சுகாதார அமைச்சுக்குத் தெரியப்படுத்தியிருந்தார்.

அதனை முன்னிட்டு அது தொடர்பில் ஆராய இன்று விஜயம் ஒன்றை நாம் மேற்கொண்டு வைத்தியசாலைப் பணிப்பாளர், வைத்திய நிபுணர்கள் உட்பட ஊழியர்கள் மற்றும் நோயாளிகளுடன்




கலந்துரையாடியுள்ளோம்.

சுகாதார ஊழியர்கள் குறைபாடுகள் காரணமாக வைத்திய நிபுணர்கள் தங்கள் கடமைகளை சரியாக மேற்கொள்ள முடியாமையும் பல இன்னல்களை எதிர்நோக்கியுள்ளனர்.

சுமார் 100 ஊழியர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகிறது. தாதியர்களுக்கான பற்றாக்குறையும் கணிசமான அளவு நிலவுகிறது. இந்த குறைபாடுகள் நிவர்த்தி செய்து கொடுக்கப்பட வேண்டும்.

இதுபோன்று பௌதீக வளங்கள் பற்றாக்குறையும் நிலவுகிறது. அவசர விபத்து சிகிச்சை பிரிவு இங்கு இல்லை. மற்றும் இருதய நோய்க்கான கட்டடமும் இங்கு இன்மையால் நோயாளிகள் வெளிமாவட்டங்களுக்குச் சென்று சிகிச்சை பெறவேண்டியுள்ளது. சிடி இயந்திரம் செயலிழந்தும் எம்.ஆர்.ஐ. போன்ற இயந்திர பற்றாக்குறைமும் நீடிக்கிறது.

வைத்தியசாலைக்கான விடுதிகளில் சீராக மின்விசிறி கூட இயங்குவதில்லை எனவும் குடி தண்ணீர் கூட பல பற்றாக் குறைபாடுகளுடன் இயங்கி வருகிறது என்றும் முறைப்பாடுகள் தெரிவிக்கப்படுகின்றன.

இந்தப் பிரச்சினைகள் சீர் செய்யப்பட்டு, திறம்பட சேவைகளை வழங்க வேண்டும். எதிர்வரும் வாரமளவில் இது தொடர்பில் நாடாளுமன்றத்திலும் பேசி பிரச்சினைகளை தீர்க்க முழு முயற்சிகளையும் மேற்கொள்வோம்.– என்றார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்






## பொலிஸார்...

பக்கசார்பாகச் செயற்படாது பிரான்ஸ் ராசனைக் கைது செய், பொலிஸ் நிலையத்துக்குள் வைத்து தாக்கியவருக்குப் பாதுகாப்பு கொடுக்காதே, பொது மக்கள் மீது தாக்குதல் நடத்திய பொலிஸார் மீதும் நடவடிக்கை வேண்டும்" எனப் பல்வேறு கோஷங்களை எழுப்பினர்.

இதனையடுத்து, வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் சார்பாக 10 பேரை அழைத்துப் பேசினார். இதன்போது பொலிஸ் நிலையத்தில் வைத்து தாக்கிய வெளிநாட்டில் இருந்து வருகை தந்த நபரை 3 தினங்களுக்குள் கைது செய்து உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்ததுடன், குறித்த சம்பவத்துடன் சம்பந்தப்பட்ட பொலிஸார் மீதும் விசாரணை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்திருந்தார். இதனையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கிருந்து சென்றனர்.

இதேவேளை, கடந்த மாதம் 15 ஆம் திகதி வவுனியா, சின்னப் பூவரசன்குளம் பகுதியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையைப் புளியங்குளம் பொலிஸ் நிலையத்தின் பதில் பொறுப்பதிகாரி உட்பட ஏனைய பொலிஸாரும் பிடித்து வைத்திருக்க வெளிநாட்டில் இருந்து வருகை தந்திருந்த நபர் ஒருவர் பொலிஸ் நிலையத்துக்குள் வைத்து தாக்கினார் என்று பாதிக்கப்பட்ட குடும்பஸ்தர் தெரிவித்திருந்தார். அவர் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மேல் அதிகாரியை...

குற்றச்சாட்டில் அதே வைத்தியசாலையில் கடமையாற்றும் தாதி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் கடமையாற்றும் ஆண் தாதி ஒருவர் தனக்குக் கிடைக்க வேண்டிய சம்பளம் மற்றும் மேலதிக நேரக் கொடுப்பனவு ஆகியன கிடைக்கவில்லை எனச் சம்பந்தப்பட்ட மேல்நிலை அதிகாரியை வினவியதுடன் திடீரென அவர் மீது தாக்குதலும் நடத்தியுள்ளார்.

இதில் பாதிக்கப்பட்ட மேல்நிலை அதிகாரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றிருந்த நிலையில் பொலிஸார் இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து சம்பந்தப்பட்ட தாதியைக் கைது செய்துள்ளனர்.

## சகல...

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் வெளிநாட்டு ஊடகம் ஒன்றுக்கு அவர் வழங்கிய செவ்வியில் மேலும் கூறிய தாவது:-

"நாட்டு மக்கள் என் பக்கம் நிற்கும் போது வேட்பாளர்களைக் கண்டு நான் அஞ்சமாட்டேன். சகல வேட்பாளர்களுடனும் பகிரங்க விவாதம் நடத்தவும் நான் தயார்.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் மக்களின் பெருவாரியான அங்கீகாரம் எனக்குக் கிடைக்கும். நான் ஊழல், மோசடிகளைச் செய்யவில்லை. கொலைகளைச் செய்யவில்லை. எப்போதும் மக்களுக்காகவும், நீதிக்காகவுமே குரல் கொடுத்து வருகின்றேன்." - என்றார்.

## வவுனியா...

ஒழிப்புப் பிரிவு பொலிஸ் பரிசோதகர் ரிஸ்வி தலைமையிலான பொலிஸ் பிரிவினர் இன்று அதிகாலை திடீர் சோதனை நடவடிக்கையை மருதங்கேணி பகுதியில் முன்னெடுத்தனர்.



இதன்போது, போதைப்பொருளைத் தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் வடமராட்சி கிழக்கு பிரதேசத்தைச் சேர்ந்த 36, 35 ஆகிய வயதுடைய இரு நபர்கள் கைது செய்யப்பட்டதுடன், அவர்களிடமிருந்து 30 கிலோ 500 கிராம் கேரள கஞ்சாவும் மீட்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட நபர்கள் மற்றும் கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சா ஆகியவை மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸ் நிலைய போதைப்பொருள் ஒழிப்புப் பொலிஸ் பிரிவினருடன் இணைந்து மருதங்கேணி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

அண்மைக்காலமாக வவுனியா விசேட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் வவுனியா பொலிஸ் நிலைய போதைப்பொருள் ஒழிப்புப் பொலிஸ் பிரிவினருடன் இணைந்து பல திடீர் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## தெல்லிப்பழை...

**(ந.லோகதயாளன்)**

யாழ். தெல்லிப்பழையில் உயிரிழந்த குடும்பப் பெண்ணைக் கொலை செய்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படும் மகன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தெல்லிப்பழையிலுள்ள வீடொன்றிலிருந்து நேற்றுமுன்தினம் பெண்ணொருவரின் சடலம் மீட்கப்பட்டது. அது கொலையா? தற்கொலையா? என ஆராயப்பட்ட நிலையில், பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவ சந்தேகத்துக்கிடமான முறையில் உயிரிழந்த பெண்ணின் 16 வயதுடைய மகன் மீது நேற்று சந்தேகம் வெளியிட்டிருந்தார்.

கைபேசி விளையாட்டுக்களுக்கு அடிமையான மேற்படி மகன், தாயாரின் சடலம் மீட்கப்பட்ட பின்னர் காணாமல் போன நிலையில், இன்று காலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரிடம் விசாரணைகள் இடம்பெறுவதோடு போதைப்பொருள் பாவனை தொடர்பான பரிசோதனைக்கும் அவர் உட்படுத்தப்பட்டுள்ளார்.






# குடிசார் அமைப்புக்களின் சம்மேளனக் கலந்துரையாடல்

(த.சுபேசன்)

யாழ். மாவட்ட குடிசார் அமைப்புக்களின் சம்மேளனக் கலந்துரையாடல் அண்மையில் யாழ்ப்பாணம், புங்கன் குளம் சந்தியில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது.

யாழ். மாவட்ட குடிசார் அமைப்புக்களின் தலைவி திருமதி தமிழ்ச்செல்வி மதியழகன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் மாவட்ட குடிசார் அமைப்புக்களின் சம்மேளன பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது சம்மேளனத்தின் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.



# அறநெறி ஆக்கத்திறன் போட்டிகளில் வென்ற 40 மாணவர்கள் கௌரவிப்பு

( வி.ரி.சகாதேவராஜா)

இலங்கை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்திய அறநெறி ஆக்கத்திறன் போட்டிகளில் சாதனை படைத்த 40 அறநெறி மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வு திருக்கோவில் பாலக்குடா பாலவிநாயகர் ஆலய அறநெறிப் பாடசாலையில் நேற்று (5)இடம் பெற்றது.

தேசிய ரீதியில் தெரிவான குருகுல மாணவன் ஜெயராஜா யுவராஜ் உள்ளிட்ட நாற்பது மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

அம்பாறை மாவட்ட திருநாவுக்கரசு நாயனார் குருகுலம் நடத்தி வரும் 11 அறநெறிப் பாடசாலைகள் இணைந்து நாவுக்கரசர் பெருமானுடைய குரு பூசை தினத்தை சிறப்பாக நடத்திய போது இந்தக் கௌரவிப்பு நிகழ்வும் நடைபெற்றது.

குருகுல ஸ்தாபகர் பணிப்பாளர் க. இராசரெட்ணம் தலைமையில் குரு பூஜையும் கௌரவிப்பு நிகழ்வும் நடைபெற்றன.

பிரதம அதிதியாக திருக்கோவில் வலயக் கல்விப் பணிப்பாளர் த.உதயகுமார் கலந்து சிறப்பித்தார். ஏனைய அதிதிகளும் கலந்து கொண்டனர்.

போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் பரிசு வழங்கப்பட்டது.

அறநெறி பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.





# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## குழப்பத்தில் ரணில்!

சிறிலங்கா பொதுஜன பெரமுன - ஐக்கிய தேசியக் கட்சி ஊடாட்டம் மீண்டும் 'பழைய குருடி கதவைத் திறவடி!' என்ற கதையாகியிருப்பதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்காவிலிருந்து நாடு திரும்பி, மீண்டும் மொட்டு அரசியலில் சுறுசுறுப்பாக இறங்கி உள்ள அக்கட்சியின் ஸ்தாபகர்களில் ஒருவரான பஸில் ராஜபக்ஷ, இந்தக் குறுகிய இரண்டொரு மாத காலத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஐந்தாவது தடவையாகச் சந்தித்து அரசியல் ஆலோசனைகளில் ஈடுபட்டிருக்கின்றார்.

அந்த வரிசையில் கடந்த வார இறுதியிலும் ஒரு சுற்றுச் சந்திப்பு நடந்திருக்கின்றது.

மீண்டும் உடனடிப் பொதுத் தேர்தலை நடத்துவதற்கு பஸில் ராஜபக்ஷ தரப்பு வலியுறுத்தியதாகவும், ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதற்குப் பிடி கொடுக்காமல் - நேரடிப் பதில் தராமல் - தவிர்த்தார் என்றும் செய்திகள் வெளியாகின.

இன்னும் 134 நாள்கள் முதல் 164 நாள்களுக்குள் ஜனாதிபதித் தேர்தல் நடந்துவிடும். ஆனால் அந்தத் தேர்தலில் தாம் களமிறங்குவது தொடர்பில் ஒரு முடிவெடுக்க முடியாது தடுமாறுகின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

தான் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவாரா, போட்டியிடுவாராயின் எந்த அணியுடன் சேர்ந்து களத்தில் இறங்குவார், அது குறித்த அறிவிப்பை எப்போது வெளியிடுவார் என்பவை பற்றி எல்லாம் தீர்மானிக்க முடியாமல் அவர் பெரும் தடுமாற்றத்தில் இருக்கின்றார் என்று தெரிகின்றது.

மொட்டுக் கட்சியுடன் தாம் அணி வகுத்தால் சிறுபான்மையினரான தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களின் வாக்குகளைத் தாம் இழக்கின்றமையோடு, அவை சஜித் பிரேமதாஸா பக்கத்துக்குப் 'பிளஸ் பொயிண்ட்' ஆகச் சேர்ந்து விடும் என்பதும் ரணிலுக்குத் தெரியும். அதனால் அவர் அந்த ஏற்பாட்டுக்கு உடன்படுகிறார் இல்லை.

அதேசமயம் மொட்டுக் கட்சியின் ஆதரவு இல்லை என்றால் ஜனாதிபதித் தேர்தல் களத்தில் நிற்பதற்கான அடிப்படை ஆதரவுத் தளமும் தமக்கு இல்லாமல் போய்விடும் என்ற யதார்த்தமும் அவருக்குப் புரிகின்றது.

மொட்டுக் கட்சியின் ஆதரவில், அக்கட்சியின் கடைக்கண் பார்வையில், ஜனாதிபதிப் பதவிக்கு வந்த ரணில் விக்கிரமசிங்க இப்போது மொட்டுக் கட்சியை முழுமையாக அரவணைக்கவும் முடியாமல், முழுமையாகப் புறமொதுக்கவும் இயலாமல் தடுமாறுகின்றார். மெல்லவும் முடியாத, விழுங்கவும் இயலாத இக்கட்டு நிலைமை.

இந்த மே தின கூட்டத்தில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து கணிசமான எம்.பிக்கள் தம் பக்கம் வருவர், அத்தோடு சேர்த்து ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தமது முடிவை உத்தியோகபூர்வமாக அறிவிக்கலாம் என்றுதான் ரணில் தரப்பு திட்டமிட்டது.

ஆனால் எதுவும் சரி வரவில்லை. யாரும் ரணில் பக்கமோ அவரது ஐ.தே.கட்சிப் பக்கமோ புதிதாக வரவே இல்லை. இது ரணில் தரப்புக்குப் பெரும் அரசியல் பின்னடைவு என்று கூறப்படுகிறது.

மே தினத்தில் ரணில் தரப்பு தனது பலத்தை நிரூபிக்கும் என்று கூறப்பட்ட திட்டம் பிசுபிசுத்துப் போன நிலைமையிலேயே, இப்போது ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் ஒரு விரைந்த பொதுத் தேர்தலை நடத்தி முடிக்கும்படியான தனது வற்புறுத்தலை - நச்சரிப்பை - மீண்டும் ஆரம்பித்து இருக்கின்றனர் ரணில் தரப்பின் பங்காளிகளான மொட்டு கட்சியினர் என்று செய்திகள் வெளிவரத் தொடங்கியுள்ளன.

ஜனாதிபதித் தேர்தலில் நின்று தாம் வெல்லுவதற்கான அரசியல் சூழ் நிலையைத் தமக்குச் சாதகமாகப் பேணும் நோக்குடன் தேசிய ரீதியில் நடக்க வேண்டிய உள்ளூராட்சித் தேர்தல்களையே அரைவழியில் முட்டுக்கட்டை போட்டு நிறுத்தி, ஒன்றரை வருடங்களாக அதை இழுத்தடித்து. அதன் மூலம் தானொரு 'ஜனநாயக விரோதி' என்ற பெயரையும் சுவீகரித்து நிற்கின்ற ரணில் விக்கிரமசிங்க, தமது அந்தத் தந்திரோபாய பாதைக்கு மாறாக, இப்போது ஜனாதிபதி தேர்தல் நெருங்கும் சமயத்தில், அதற்கு முன்னர் திடீர்ப் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்த இணங்குவாரா என்பது சந்தேகம்தான்.



# மணவர்களுக்குத் தலைமைத்துவப் பயிற்சி

**(ஹஸ்பர் ஏ.எச்.)**

பத்தாம் குறிச்சி அறிவு ஒளி மையத்தின் பயன்பெறும் மாணவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சிப் பட்டறை நேற்று (05) திருகோணமலை நகரசபை வளாகத்தில் உள்ள நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

சிறப்பு விருந்தினராக திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத் தலைவர் சண்முகம் குகதாசன் கலந்து கொண்டு பயிற்சியை ஆரம்பித்து வைக்க அமர்வை வளவாளர் கணேஷ் நடத்தினார்.

இந்த அமர்வை பத்தாம் குறிச்சி அறிவு ஒளி மையத்தின் பணிப்பாளர் அஜித் குமார் உதயகுமார், ஆசிரியை செல்வி.டிலக்ஷிகா புகழ் வேந்தன், மற்றும் அறநெறி ஆசிரியை ஜெயவதணி இளங்கோவன் ஆகியோர் ஒருங்கிணைப்பு செய்திருந்தனர்.






# மன்னார் சாந்திபுரத்தில் நிகழ்வுகள்!

(மன்னார் )

மன்னார் சாந்திபுரம் கிராம மக்கள், இந்த முறை சித்திரை புத்தாண்டு மற்றும் மே தின நிகழ்வுகளை ‘இணைந்த ஒருங்கிணைந்த கிராமம்’ எனும் தொனிப்பொருளில் நேற்று ஞாயிற்றுக் கிழமை (05) கொண்டாடியுள்ளனர்.

சாந்திபுர கிராமத்தின் வளரும் நட்சத்திரங்கள் விளையாட்டு கழகத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் மரடோனாவின் தலைமையில் சாந்திபுர இளைஞர்கள் யுவதிகள் மற்றும் கிராம அபிவிருத்தி சங்கங்கள் இணைந்து கூட்டாக நிகழ்வுகளை ஏற்பாடு செய்திருந்தனர்.

நிகழ்வில் கயிறுழுத்தல், கால்பந்தாட்டம், கிரிக்கெட் , கரப்பந்து, சறுக்கு மரம் ஏறுதல் உள்ளடங்களாக பல்வேறு விளையாட்டு நிகழ்வுகள் ஒழுங்கமைக்கப்பட்டன. வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன.

அதே நேரம் பனங்கட்டுகொட்டு புனித சூசையப்பர் விளையாட்டுக்கழகம் ஏற்பாடு செய்திருந்த மே தின நிகழ்வும் மன்னார் எமில் நகர் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.









# டெங்கு நுளம்பு பெருகக் கூடிய கொள்கலன் சேகரிப்பு நிகழ்வு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தஸ்ஸீமா பசீரின் பணிப்புரையின் பேரில் அவரது நேரடி கண்காணிப்பில் டெங்கு நுளம்பு பெருகக் கூடிய கொள்கலன் சேகரிப்பு நிகழ்வு மாவாடிப்பள்ளி பிரதேசத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர், பொது சுகாதார பரிசோதகர்கள், நுளம்பு கள தடுப்பு பிரிவினர்கள், சுற்றாடல் கழக மாணவர்கள், பிரதேச சபை ஊழியர்கள் நுளம்பு பெருகும் இடங்களை பரிசோதனை செய்து நுளம்பு பெருகும் பொருள்கள் பிரதேச சபை ஊழியர்களினால் அகற்றப்பட்டன. இதேபோன்று ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் ஒவ்வொரு கிராம சேவ கர் பிரிவில் இந்த நிகழ்வு நடைபெறவுள் ளது என்று காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

# இன்று போராட்டத்தில் ஈடுபட்டனர் கிண்ணியா கிராம சேவகர்கள்!

(எச் எம் ஹலால்தீன் )

நாடு முழுவதிலும் உள்ள கிராம சேவகர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இரண்டு நாள் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

இந்த நிலையில் கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட 31 கிராம சேகவர்கள் இன்று (06) போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கிராம சேவை உத்தியோகத்தர்கள் சம்பள முரண்பாட்டை தீர்த்தல், கடமை யாற்றுவதற்குரிய வசதிகளை ஏற்படுத்திக் தருதல் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் கிராம சேவை அதிகாரிகளிடம் பல்வேறு தேவைகளுக்கு வந்தவர்கள் பெரும் பிரச்சினைகளை எதிர் நோக்கினர் என்று தெரிவித்தனர்.

பல கிராம சேவையாளர் பிரிவுகள் வெறிச்சோடி கிடந்தன. ஆள்கள் நடமாட்டம் இன்றிக் காணப்பபடட்டது.

## யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை அன்னையின்

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
18 - 05 - 1951

மறைவு
04 - 05 - 2024

எமது பாடசாலை
பழைய மாணவர் சங்கத்தின் தலைவரும்
முன்னாள் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளருமான

## கலாநிதி பாலசுப்பிரமணியம் இராஜேஸ்வரன்

(ஓய்வுபெற்ற புவியியல் பேராசிரியர் - யாழ்.பல்கலைக்கழகம்)

அவர்கள் 04.05.2024 அன்று இறைபதமடைந்த செய்தி அறிந்து மிகுந்த துயர் அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்துக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மீளாத் துயரில் ஆழும்:-
யாழ்.இந்து ஆரம்ப பாடசாலைச் சமூகம்





# காரைதீவு வைத்தியசாலையில் 40 லட்சம் ரூபா செலவில் கட்டடம்

(வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவு வைத்தியசாலையில் சுமார் 4 மில்லியன் ரூபா பெறுமதியான புதிய கட்டடம் ஒன்று அமைக்கப் படவுள்ளது. இதற்கான அடிக்கல் நடப்பட்டது.

காரைதீவு பிரதேச வைத்திய சாலையின் மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் நடராசா அருந்திரன் தலைமையில் அடிக்கல் நடும் விழா நேற்று இடம்பெற்றது.

பிரதம அதிதியாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் ஸஹீலா இஸ்ஸதீன் கலந்து கொண்டார்.

இது பிரதான வீதிக்கு அருகாமையில் உள்ள வைத்தியசாலைக் காணியில் கட்டப்பட்ட புதிய கட்டடத்தையும் பழைய கட்டடத் தொகுதியையும் இணைக்கும் வகையில் இது அமைக்கப்படவுள்ளது.



இது நிர்மாணிக்கப்பட்ட பின்னர் புதிய கட்டடம் வெளிநோயாளர் பிரிவாகப் பயன்படுத்தப்படவுள்ளது.

அடிக்கல் நடும் நிகழ்வில் வைத்தியர்கள், வைத்தியசாலைப் பணியாளர்கள், வைத்தியசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.



# அரசியலில் பெண்கள் பிரதிநிதித்துவம் அதிகரிப்பது தொடர்பில் செயலமர்வு

(த.சுபேசன்)

அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பது தொடர்பான விசேட செயலமர்வு சனிக்கிழமை பிற்பகல் சாவகச்சேரி நுணாவில் பகுதியில் இடம்பெற்றது.

சட்டத்துக்கும் மனித உரிமைகளுக்குமான நிலையத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற மேற்படி செயலமர்வில் சட்டத்தரணி கார்த்திகா வளவாளராக கலந்து கொண்டார்.

இதன்போது அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரித்தல்,பெண்களை பொருளாதார ரீதியாக வலுப்பெறச் செய்தல், குடும்ப வன்முறைகளில் இருந்து பெண்களை மீட்டெடுத்தல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டன.

சட்டத்துக்கும் மனித உரிமைகளுக்குமான நிலையத்தின் உத்தியோகத்தர் திருமதி ஜெயரூபி தலைமையில் இடம்பெற்ற மேற்படி வலுவூட்டல் செயலமர்வில் உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் பெண் பிரதிநிதிகள், சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், இஸ்லாம் சமய பெண்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவப் பீடப் பிதாமகர் சு.வித்தியானந்தன்...!

**கலாநிதி ஆறு.திருமுருகன்**



ஈழத் திருநாடு பெற்ற உன்னதமான தமிழ் அறிஞர்களில் பேராசிரியர் சு.வித்தியானந்தன் தனித்துவம் மிக்கவர். பல சான்றோர்களை எம் மண்ணுக்குத் தந்த தெல்லிப்பழை கிராமத்தில் சைவத்தமிழ் பண்பாட்டு பாரம்பரியம் மிக்க குடும் பத்தில் தோன்றியவர் இவர். தெல்லிப்பழை வீமன்காமத்தில் வசித்த புகழ்பூத்த வழக்கறிஞர் சுப்பிரமணியம் – முத்தம்மா தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார்.

நல்லை நகர் நாவலர் பெருமானின் சிந்த னைகளுக்கு மதிப்புக் கொடுத்த வீமன்காமம் சின் னத்தம்பியால் வீமன்காமத்தில் சைவப்பாரம் பரியத்தைப் பேணும் முகமாக ஒரு பாடசாலை நிறுவப்பட்டது. அந்தப் பாடசாலையை நிறுவியவர் வித்தியானந்தனின் பேரனாவார். பேரனார் ஆரம்பித்த பாடசாலையைத் தொடர்ந்து பேராசிரியரின் தந்தை, தாய் பேணி வளர்த்தனர். இதனால் தெல்லிப்பழை, மாவிட்டபுரம், மல்லாகம் போன்ற பகுதிகளில் வாழ்ந்த மக்கள் இந்தக் குடும்பத்தவர்களை உயர் நிலையில் வைத்துப் போற்றினர். மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோயில், கீரிமலை நகுலேஸ்வரர் கோயில் இந்தக் குடும்பத்தவர்களின் பாரம்பரிய வழிபாட்டுத் தலங்களாகும்.

பேராசிரியர் தங்கள் குடும்பப் பாடசாலையில் ஆரம்பக் கல்வியையும் பின் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் இடைநிலைக் கல்வியையும் அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூ ரியிலும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் கல்வி கற்று கொழும்புப் பல்கலைக்கழக மாணவராக 1941 ஆம் ஆண்டு தேர்ச்சியடைந்தார். பல்கலைக் கழகத்தில் தமிழ், ஆங்கிலம், லத்தீன் வரலாறு ஆகிய பாடங்களைக் கற்றுத் தனது முதலாவது இளங்கலைப் பட்டப்படிப்பை 1944 ஆம் ஆண்டு முடித்தார்.

தமிழ் மொழியில் இருந்த ஆர்வம் காரணமாகத் தமிழில் முதுகலைப்பட்டத்தை 1946 ஆம் ஆண்டு பெற்றார். இவரது பேராற்றலை உணர்ந்து இலங்கைப் பல்கலைக்கழகம் தமிழ்த்துறையில் உதவி விரிவுரையாளராக நியமித்தார்கள்.

பேராசிரியர் 1948 ஆம் ஆண்டு லண்டன் சென்று கீழைத்தேய கல்விக் கல்லூரியில் தனது முனை வர்ப்பட்ட ஆய்வை முடித்தார். பின் இலங்கை திரும்பி இலங்கைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையில் இணைப் பேராசிரியராகவும் பின்னர் பேராசிரி யராகவும் பணிபுரிந்தார். இலங்கைப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியர் கணபதிப்பிள்ளையிடமும் சுவாமி விபுலானந்தரிடமும் தமிழைக் கற்றதால் தமிழ்மொழி பற்றிய ஆய்வுகளில் அதிக கவனம் செலுத்தினார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராக விளங்கிய காலத்தில் நாடகம், நாட்டுக்கூத்து கருத்தரங்குகள் போன்றவற்றில் மிகுந்த அக்கறையோடு செயற்பட்டு மாணவர்களது அபிமானத்தைப் பெற்றார். பின் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இணைந்து யாழ். வளாகத் தலைவராகவும் பின் யாழ்.பல்கலைக்கழகத்தின் முதலாவது துணைவேந்தர் என்ற பெருமையையும் பெற்றுத் திகழ்ந்தார்.

பேராசிரியர் வித்தியானந்தனின் மனித நேயப் பணிகள் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பணி யாற்றும்போது தமிழ் மொழியை, தமிழர் பண் பாட்டைப் பாதுகாப்பவர்கள் கல்விமான்கள் மட்டுமல்ல கிராமத்துக் கலைஞர்களுமே என்று தனது கருத்தை முன்வைத்தார். அதன் விளைவாகக் காங்கேசன் துறையைச் சேர்ந்த நடிகமணி வைரமுத்துவின் நாடகக்குழுவைப்பேராதனைப்பல்கலைக்கழகத்துக்கு அழைத்து அவர்களின் நிகழ்ச்சியைப் பல்கலைக்கழக சமூகம் புகழ வைத்தவர். அந்த முயற்சியின் தொடர்ச்சியே அவர் துணைவேந்தர் ஆக இருக் கும்போது யாழ். பல்கலைக்கழகத்தில் நாடகத் துறையை ஒரு பாடமாகக் கற்பதற்கு வழி ஏற்பட்டது.

நடிகமணி வைரமுத்து தனது நிறைவுக் காலத்தில் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய நேர்முகத்தில் பின்வருமாறு குறிப்பிட்டார்.

“ஊர் மேடைகளிலும் திருவிழா மேடைகளிலும் எத்தனையோ வருடங்களாக இசை நாடக நிகழ்ச் சியை நடத்தி வந்தோம்.

எங்களை ஒரு பொருட்டாக மதித்து பேராதனைப் பல்கலைக்கழகத்துக்கு அழைத்து கற்றோர் சபையில் கௌரவம் செய்து எம்மை நேசித்த, பேராசிரியர் வித்தியானந்தனுக்கு எனது வாழ்நாள் முழுவதும் நன்றியுடையேன்” எனக் குறிப்பிட்டார். பேராசிரியரின் மனிதநேயப் பணி என்பது, இப்படியான செயற் பாடுகள் தான்.

கலைஞர்களைப் ரயிலில் அழைத்துச் சென்று அவர்களை உலகறியச் செய்வதில் ,வர் காட்டிய ஆர்வம் மறக்க முடியாதது.

இதேபோன்று பல வறுமைப்பட்ட மாணவர்களை மேம்படுத்துவதில் பெரும் பங்காற்றினார்.




# காத்தான்குடியில் ஊடக செயலமர்வு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

காத்தான்குடியை தலைமையகமாகக் கொண்டு இயங்கும் சுயாதீன ஊடகவியலாளர் போரத்தின் ஏற்பாட்டில் “பகிர்வதற்கு முன் சிந்தியுங்கள்” எனும் தொனிப்பொருளில் ஊடக செயலமர்வு செய்குல் பலாஹ் கல்வி மையத்தின் கேட்போர் கூடத்தில் போரத்தின் தலைவர்

எம்.எச்.எம்.அன்வர் தலைமையில் இடம்பெற்றது. இவ்ஊடக செயலமர்வில் உயர்தர மாணவர்கள், ஊடகத்துறையில் ஆர் வம் கொண்டோர் பலரும் கலந்து கொண்டனர். சிரேஸ்ட ஊடகவியலாளரும் விடி வெள்ளி பத்திரிகையின் பிரதம ஆசிரிய ருமான எம்.பீ.எம்.பைறூஸ் வளவா ளராக கலந்து கொண்டார்.

இதன் போது போலி செய்திகளை எவ்வாறு இனங்காண்பது,




சமூகவலைத்தள பாவனையின் போது எவ்வாறான நடைமுறைகளை பின்பற்ற வேண்டும், போலி செய்திகளால் இடம்பெற்ற மரணங்கள், சமூக வலைத்தள போலி செய்தியை உறுதிப் படுத்தாமல் பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை செய்திகள் என பல்வேறு விடயதான தலைப்புக்களில் விரிவுரையாற்றினார்.

இந்நிகழ்வில் ஆய்வுக்கும் மேம்பாட டுக்குமான இஸ்லாமிய மகளிர் ஒன்றிய தலைவி அனீஸா பிர்தௌஸ் மற்றும் மூத்த ஊடகவியலாளர்கள், இளம் ஊடகவியலாளர்கள் என பலர் கலந்து கொண்டதுடன் செயலமர்வில் பங்குபற் றியவர்களுக்கு சான்றிதழும் வழங்கி வைக்கப்பட்டன.





# வவுனியாவில் 4,309 மாணவர்களுக்காக 40 பரீட்சை நிலையங்கள்

(கே.வசந்தன்)

வவுனியா மாவட்டத்தில் 4 ஆயிரத்து 309 மாணவர்கள் இம்முறை ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர்.

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை நாடளாவிய ரீதியில் இன்று காலை ஆரம்பமாகியுள்ளது. அந்தவகையில் வவுனியா மாவட்டத்திலும் இன்று பரீட்சை ஆரம்பமாகியுள்ளது.

இம்முறை ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் வவுனியா மாவட்டத்தில் 4 ஆயிரத்து 309 மாணவர்கள் தோற்றுகின்றனர். அவர்களுக்காக 40 பரீட்சை மத்திய நிலையங்கள் அமைக்கப் பட்டுள்ளதுடன், 16 இணைப்புக் காரியாலயங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

இந்தப் பரீட்சையில் நாடளாவிய ரீதியில் இம்முறை 4 இலட்சத்து 52 ஆயிரத்து 979 பேர் தோற்றுகின்றனர். அவர்களில் 3 ஆயிரத்து 87 ஆயிரத்து 648 பாடசாலை பரீட்சார்த்திகளும், 65 ஆயிரத்து 331 தனியார் விண்ணப் பதாரிகளும் அடங்குகின்றனர்.



INDSRI FERRY
யாழ்
↕
நாகை
13/05/24
இல் இருந்து தினசரி
"சிவகங்கை" பயணிகள் கப்பல்
சேவை
துட்டு இருந்தால் வாங்கலாம் பட்டு
• சேலை துணிமணிகள் வாங்க
• சமயச் சுற்றுலாக்கள்
• அழகிய கடற்கரைகள்
மேலும் அனுபவிக்க ...
ரூ 15,000*
இல் இருந்து
www.sailindsri.com
பதிவுகளுக்கு
Google play
Download on the App Store
*ஒரு வழிக் கட்டணம் (வரிகள் இன்றி)




# கிண்ணியாவில் வீடுகளை உடைத்த யானைகள்!

(எச்எம் ஹலால்தீன் )

கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட சோலை வெட்டுவான் கிராமத்துக்குள் இரவு புகுந்த காட்டு யானைகள் மூன்றுக்கும் மேற்பட்ட வீடுகளை சேதமாக்கியதோடு ஏனைய பயிர்களையும் அழித்துச் சென்றுள்ளன.

மரவள்ளி, கத்தரி உட்பட ஏனைய தோட்ட பயிர்களை நாசம் செய்துள்ளன.

இரவு வேளை கிராமத்துக்குள் புகுந்த யானைகள் வீட்டு ஜன்னல், கூரை, சுவர்கள் என்பனவற்றை உடைத்துள்ளனு. இது தொடர்ந்து இந்தப் பிரதேசத்தில் நடைபெறுகின்ற ஒரு விடயமாகும்.

யானை வேலி போட்டுள்ளார்கள். ஆனால் யானைகள் வேலியை உடைத்துக் கொண்டு அல்லது அதைத் தாண்டி கொண்டு ஊர்மனைக்குள் வருகின்றன.

இந்தக் கிராமத்தில் சுமார் 150 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர் எனினும் ஒவ்வொரு இரவும் யானைகள் இந்த கிராமத்தை சுற்றி வளைத்து வருவதாக தெரிவிக்கின்றனர்.

இரவு நேரங்களில் தூங்குவது வெளியில் செல்வது பெரும் கஷ்டமாகவும் பயமாகவும் உள்ளதாக கிராம மக்கள் கூறுகின்றனர்.

யானைத் தொலையால் குடியிருக்க முடியாதுள்ளது. தகுந்த பாதுகாப்பு எங்களுக்கு தர வேண்டும். ஊருக்குள் யானைகள் வந்து மிகவும் அட்டகாசம் செய்கின்றன.

இது வேறு இடத்தில் இருந்து கொண்டு வந்து விடப்பட்ட யானை என்றும் மக்கள் தெரிவித்துள்ளனர்..




# அரசின் பெரு முயற்சியால் எமது நாடு பொருளாதாரத்தில் வளர்ந்து வருகிறது!

## இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் தெரிவிப்பு

(பழுவூரான்)

அரசும், ஜனாதிபதியும் இன்னும் பலரும் கூட்டாக மேற்கொண்ட கடின உழைப்பால் தற்போது நாடு படிப்படியாக பொருளாதார வளர்ச்சி கண்டு வருகின்றது என்று வர்த்தக இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டம் எருவில் பிறீடம் விளையாட்டுக் கழகத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவும், சிறப்பு விளையாட்டு நிகழ்வும் நேற்று ஞாயிற்றுக்கிழமை (05) இடம்பெற்றன.

இதன்போது பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது,

நாடு மோசமான பொருளாதார சூழ்நிலையில் இருந்ததை அனைவரும் அறிவார்கள்.

எரிபொருள்கள் உள்ளிட்ட அனைத்தையும் பெறுவதற்காக வரிசையில் நிற்க வேண்டிய சூழ்நிலை இருந்தது. பணமிருந்தும் பொருள்களை வாங்க முடியாத நிலமை இருந்தது. இதனால் பலர் நாட்டையே விட்டு வெளியேறினார்கள். இதனால் மிகப்பெரிய பொருளாதார வீழ்ச்சிக்குள் எமது நாடு சென்றிருந்தது.

பொருளாதார வீழ்சியைச் சந்தித்த பல நாடுகள், 50 வருட காலமாகவும் உலகத்தில் எழவில்லை. ஐரோப்பிய நாடுகளில் கூட விலைவாசிகள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

அபிவிருத்தி அடைந்த நாடுகளில் கூட கொவிட் தொற்றுக்குப் பின்னர் பணவீக்கம் பாரிய பிரச்சினையாக இருந்தது.

தற்போது 400 ரூபாவாக இருந்த டொலர் 298 ரூபாவுக்கும், 460 ரூபாவாக இருந்த யூரோ 316 ரூபாவாகவும் குறைந்துள்ளது. எனவே படிப்படியாக நாடு வளர்ச்சி கண்டு வருகின்றது. இருந்தாலும் மக்களின் வாழ்க்கைச் சுமை குறையவில்லை. இது பெரிய கவலையான விடயமாகும். இது குறையவேண்டும். அதைத்தான் ஜனாதிபதியும் விரும்புகின்றார்.

அதற்காகப் பொருள்களின் விலை வெகுவாகக் குறைக்கப்படல் வேண்டும். விலைவாசியைக் குறைப்பதற்காக உற்பத்தித் திட்டங்களை இந்த வருடத்திற்கு உரிய வரவு செலவுத் திட்டத்தில், நிதியை ஒதுக்கீடு செய்வதற்கு உரிய நடவடிக்கைகளை அரசு வேகமாக முன்னெடுக்கின்றது.

அதுபோல் காணி உறுத்திப் பத்திரம் இல்லாதவர்களுக்குக் காணி உறுத்திப் பத்திரங்களை வழங்கி வைக்கும் முக்கிய வேலைத் திட்டத்தை அரசு முன்னெடுத்து வருகின்றது. எனினும் இந்த நாட்டைப் பொருளாதார ரீதியாக மேம்படுத்த வேண்டும் என்பதுதான் எமது அனைவரதும் ஒட்டுமொத்தமான நோக்கமாகும்.

அதற்காக வேண்டி நாம் தொடர்ச்சியான முன்னெடுப்புக்களை மேற்கொண்டு வருகின்றோம்.- என்றார்.

இந்த நிகழ்வின் போது கிராமப் பெரியோர்கள், பொதுமக்கள், விளையாட்டுக் கழக உறுப்பினர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர். போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பெறுமதியான பரிசில்களும் வழங்கப்பட்டன.

# வாரணாசியில் பிரதமர் மோடி 14 இல் வேட்புமனுத் தாக்கல்

## மூன்றாவது முறையாகத் தொடர்ந்து அங்கு போட்டி

வாரணாசி,மே06

வாரணாசியில் வரும் 13 ஆம் திகதி பிரதமர் மோடி வாகனப் பேரணியை நடத்துகிறார். அடுத்த நாள் அவர் அங்கு வேட்பு மனுத் தாக்கல் செய்கிறார்.




பிரதமர் மோடி, தொடர்ந்து 3 ஆவது முறையாக உத்தரபிரதேச மாநிலம் வாரணாசி தொகுதியில் போட்டியிடுகிறார். அத்தொகுதியில் இறுதிக்கட்ட தேர்தல் நாளான ஜூன் முதலாம் திகதி வாக்குப்பதிவு நடக்கிறது. இந்நிலையில், வாரணாசி தொகுதியில் பிரதமர் மோடி 14 ஆம் திகதி வேட்புமனுத் தாக்கல் செய்கிறார்.

அதற்கு முந்தைய நாள் 13ஆம் திகதி அவர் வாரணாசியில் வாகனப் பேரணி நடத்துகிறார். பேரணி செல்லும் பாதை இறுதி செய்யப்பட்டுவிட்டது. பேரணிக்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன என வாரணாசி நகர பா.ஜனதா தலைவர் வித்யாசாகர் ராய் தெரிவித்தார்.

வாரணாசி தொகுதியானது 1952 முதல் 1962 வரை காங்கிரஸ் வசம் இருந்தது. 1967இல் சி.பி.எம். கட்சி வென்றது. 1971 இல் காங்கிரஸ், 1977இல் ஜனதா கட்சி, 1980, 1984இல் காங்கிரஸ் வெற்றி பெற்றது.

இதன்பின்னர் 1989 தேர்தலில் ஜனதா தளமும் 1991 முதல் 1999 ஆம் ஆண்டு வரையிலான 4 தேர்தல்களில் பா.ஜ.க தொடர்ச்சியாகவும் வென்ற தொகுதி இது. 2004ஆம் ஆண்டு காங்கிரஸின் ராஜேஷ் குமார் மிஸ்ரா இத்தொகுதியில் வென்றார். 2009 ஆம் ஆண்டு பா.ஜ.கவின் மூத்த தலைவர்களில் ஒருவரான முரளி மனோகர் ஜோஷி வெற்றி பெற்றார். 2014இல் மோடி வாரணாசி தொகுதியில் போட்டியிட்டு வென்று நாட்டின் பிரதமரானார்.

2019 ஆம் ஆண்டும் வாரணாசி தொகுதியில் பிரதமர் மோடி வெற்றி பெற்று 2 ஆவது முறையாக பிரதமரானார். தற்போது 3 ஆவது முறையாக வாரணாசியில் மீண்டும் போட்டியிடுகிறார் பிரதமர் மோடி.



# ஜார்க்கண்ட் மந்திரியின் உதவியாளருடைய வீட்டில் இருபது கோடி ரூபா பணம் சிக்கியது

ராஞ்சி, மே. 06

ஜார்க்கண்ட் மந்திரியின் உதவியாளர் வீட்டில் அமலாக்கத்துறை நடத்திய சோதனையில் 20 கோடி ரூபா பணம் சிக்கியுள்ளது. அந்தப் பணம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

ஜார்க்கண்ட் மாநில கிராமப்புற வளர்ச்சித்துறை மந்திரி ஆலம்கிர் ஆலன். கிராமப்புற வளர்ச்சித்துறை சார்பில் நிறைவேற்றப்பட்ட திட்டங்களில் பணமோசடி நடைபெற்றதாக ஆலம்கிர் ஆலன் மீது குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இது தொடர்பாக அமலாக்கத்துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

அதேவேளை, இந்த வழக்கு தொடர்பாக கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் கிராமப்புற வளர்ச்சித்துறை தலைமைப் பொறியாளர் வீரேந்திர ராம் கைது செய்யப்பட்டார்.

இந்நிலையில், பணமோசடி வழக்கு தொடர்பாக மந்திரி ஆலம்கிர் ஆலனின் உதவியாளர் சஞ்சீவ் லாலில் வீடு உள்பட பல்வேறு இடங்களில் இன்று அமலாக்கத்துறையினர் அதிரடி சோதனை நடத்தினர். இந்த சோதனையில் சஞ்சீவ் லாலில் வீட்டில் இருந்து 20 கோடி ரூபா பணம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

# 17 பேரை ஊசி போட்டு கொன்ற தாதிக்கு 760 ஆண்டுகள் சிறை தண்டனை விதிப்பு

## பென்சில்வேனியாவில் நீதிமன்றம் தீர்ப்பு

வொஷிங்டன்,மே06

நீரிழிவு நோய் இல்லாதவர்களுக்கும், அதிகமான அளவில் இன்சுலின் மருந்தை ஊசி மூலம் செலுத்தி 17 பேரைக் கொன்ற தாதிக்கு 760 ஆண்டு சிறை தண்டனை விதித்து அமெரிக்க நீதிமன்றம் ஒன்று அதிரடித் தீர்ப்பு வழங்கியிருக்கின்றது.

அமெரிக்காவின் பென்சில்வேனியா மாகாணத்தை சேர்ந்தவர் ஹீதர் பிரஸ்டி (வயது 41). இவர் அங்குள்ள ஒரு தனியார் ஆஸ்பத்திரியில் நர்சாக பணியாற்றி வந்தார். கடந்த ஆண்டு மே மாதம் இவர் தான் பணி புரிந்த ஆஸ்பத்திரியில் சில நோயாளிகளுக்கு வேண்டும் என்றே தவறான ஊசி போட்டு 2 பேரை கொன்றார் எனக் குற்றச்சாட்டு எழுந்தது. இதுகுறித்துப் பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தினர்.

இந்த விசாரணையில் பல திடுக்கிடும் தகவல்கள் வெளியாகின. அதாவது அவர் கடந்த 2018 முதல் 2023 வரை ஐந்துக்கும் மேற்பட்ட ஆஸ்பத்திரிகளில் பணியாற்றி இருக்கிறார். மேலும் சில முதியோர் காப்பகங்களிலும் அவர் பணியாற்றினார். அப்போது நீரிழிவு நோயாளிகளுக்கு அளவுக்கு அதிகமாக



இன்சுலின் மருந்தை ஊசி மூலம் அவர் செலுத்தி உள்ளார். மேலும் நீரிழிவு நோய் இல்லாதவர்களுக்கு கூட அவர் அந்த ஊசியை செலுத்தி இருக்கிறார்.

இந்த இன்சுலின் மருந்தை ஒருவருக்கு அளவுக்கு அதிகமாக செலுத்தும்போது இதயத்துடிப்பு அதிகரித்து மாரடைப்பு ஏற்படும் அபாயம் உள்ளமை குறிப்பிடத்தக்கது. இதன் மூலம் கடந்த 5 ஆண்டுகளில் 17 பேரை அவர் கொலை செய்தமை கண்டு பிடிக்கப்பட்டது. இதனையடுத்து பொலிஸார் அவரைக் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

இந்தச் சம்பவம் நாட்டையே அதிர வைத்தது. இது தொடர்பான வழக்கு அங்குள்ள நீதிமன்றில் நடைபெற்று வந்தது. இந்த வழக்கு விசாரணையில் இன்சுலின் மருந்தை வேண்டுமென்றே அளவுக்கு அதிகமாக செலுத்தி கொலை செய்ததை அவர் ஒப்புக்கொண்டார். இதனையடுத்து அவருக்கு சுமார் 760 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இந்தத் தீர்ப்புக்கு அவரால் பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் உட்பட பல்வேறு தரப்பினரும் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

## மயக்க மருந்து கொடுத்து

# ஆஸி பெண் எம்.பிக்கு பாலியல் துன்புறுத்தல்

குயின்ஸ்லாந்து, மே 06

ஆஸ்திரேலியப் பெண் எம்.பி. ஒருவர் தனது சொந்தத் தொகுதியிலேயே மயக்க மருந்து கொடுத்து, பாலியல் துன்புறுத்தலுக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளார் என வெளியான செய்தி பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றது.

ஆஸ்திரேலியா நாட்டை சேர்ந்த எம்.பி. பிரிட்டானி லாவ்கா (வயது 37). சுகாதார துறைக்கான துணை மந்திரியாக பதவி வகிக்கும் லாகா, குயின்ஸ்லாந்து பகுதியில் உள்ள எப்பூன் தொகுதியில் இருந்து எம்.பி.யாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

இரவில் பொழுதுபோக்கத் தன்னுடைய தொகுதிக்கு உட்பட்ட பகுதியில் வெளியே சென்றபோது, அவரை சிலர் கடுமையாக தாக்கியுள்ளனர். இதன் பின் மயக்க மருந்து கொடுத்து, பாலியல் துன்புறுத்தலிலும் ஈடுபட்டு உள்ளனர். இந்தத் துயரச் செய்தியை இன்ஸ்டாகிராமில் அவர் பகிர்ந்திருக்கிறார்.



அந்த பதிவில், இந்த சம்பவம் யாருக்கு வேண்டுமென்றாலும் நடக்கலாம். எங்களில் பலருக்கு இது போன்ற சோகம் நடந்துள்ளது என தெரிவித்து உள்ளார்.

என்னுடைய உடலில் போதை பொருள் கலந்திருந்தது என்பது மருத்துவமனையில் நடந்த பரிசோதனை முடிவில் உறுதியானது. ஆனால், அவற்றை நான் எடுத்து கொள்ளவில்லை எனத் தெரிவித்து இருக்கிறார்.

இதனால் மனதளவில் பெரிதும் பாதிக்கப்பட்டேன். என்னை தொடர்பு கொண்டு பேசிய பிற பெண்களுக்கும் கூட மயக்க மருந்து செலுத்தப்பட்டு இருக்கலாம் எனத் தெரிகிறது. இது சரியல்ல. நம்முடைய நகரில் மயக்க மருந்து கொடுப்பது அல்லது பாலியல் துன்புறுத்தலில் ஈடுபடுவது போன்ற ஆபத்து இல்லாமல், நாம் மகிழ்ச்சியாக சமூகம் சார்ந்த செயல்களில் ஈடுபட முடிய வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவம் பற்றி லாகா, குயின்ஸ்லாந்து பொலிஸ் துறையிடம் புகார் அளித்திருக்கிறார். அந்நாட்டின் வீட்டு வசதி துறை மந்திரி மேகன் ஸ்கான்லன், இந்த குற்றச்சாட்டுகள் அதிர்ச்சியும், அச்சமும் ஏற்படுத்துகின்றன எனக் கூறியுள்ளார்.

பெண்கள் குடும்ப மற்றும் பாலியல் வன்முறைக்கு ஆளாவது என்பது ஏற்றுக்கொள்ள முடியாதது. பெண்களை பாதுகாக்க கூடிய வகையிலான ஒவ்வொரு விசயமும் மேற்கொள்ளப்படுவதற்கான நடவடிக்கையை எங்களுடைய அரசு தொடர போகிறது. வன்முறை ஏற்படாமல் தடுக்க போகிறது என அவர் குறிப்பிட்டார்.

பக்கங்கள் - 4

கனடா முரசு

திங்கட்கிழமை 06/05/2024

## கார் – ரயில் விபத்தில் சாரதிக்குப் படுகாயம்

ஒன்ராறியோ, மே06

கலிடோனில் கார் ஒன்று ரயிலில் மோதியதில் படுகாயமடைந்த கார்ச் சாரதி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். C3▶




## ஈழவேந்தனின் இறுதிக் கிரியைகள் நேற்றுக் கனடாவில் இடம்பெற்றன

ஒன்ராறியோ, மே 06

கடந்த வாரம் உயிரிழந்த இலங்கையின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈழவேந்தனின் இறுதிக் கிரியைகள் நேற்று இடம்பெற்றன.

2004 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் C3▶



# கனடியத் தமிழர் பேரவைக்கு எதிராக நீதிக்கான அறைகூவல் நிகழ்வு இன்று

## அதையொட்டி கனேடியத் தமிழர் கூட்டு அறிக்கை

ஒன்ராறியோ, மே 6

**கனடிய தமிழர் பேரவைக்கு எதிராக நீதிக்கான அறைகூவல் என்ற நிகழ்வொன்றினை கனேடியத் தமிழர் கூட்டு இன்று ஒழுங்கு செய்துள்ளது.**

**இன்று (மே 6) மாலை ஏழு மணிக்கு 5637 ஃபின்ச் அவெனியு ஈஸ்ட், யுனிட் 1இல் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.**

**இது குறித்து கனேடியத் தமிழர் கூட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-**

CANADIAN TAMIL COLLECTIVE
கனேடியத் தமிழர் கூட்டு

Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congrès Tamoul Canadien
"Voice of Tamil Canadians"

கனடிய தமிழர் பேரவைக்கு (CTC) எதிரான கண்டனம் மற்றும் நடவடிக்கைக்கான அழைப்புகள் ஈழத்தமிழர்கள் மத்தியில் தொடர்ந்து உரத்து எதிரொலிக்கின்றன. எனினும், இது பற்றிய எந்த நடவடிக்கையும் எடுக்காத தன்மை ஊவுஊ தரப்பில் நீடிக்கிறது. சமூகத்தின் அனைத்து பிரிவினர்களிடமிருந்தும் ஒரு காத்திரமான பதிலை எதிர்பார்த்து பல கோரிக்கைகள் எழுந்துள்ளன. ஈழத்திலும், புலம்பெயர் நாடுகளிலும் உள்ள கிராமம் மற்றும் நகர சங்கங்கள் உட்பட, மாணவர் சங்கங்களுக்கும் அப்பால் இக் கோரிக்கைகள் விடுக்கப்படுகின்றன. ஊவுஊ இன் நெருக்கமான இரகசிய உறுப்பினர்களையும் தாண்டி இவ்வாறான கண்டனங்கள் பரவலடைந்துள்ளன.

அண்மையில், கனேடியத் தமிழர் கூட்டு ("கூட்டு") மார்ச் 23, 2024 அன்று நடத்திய மக்கள் சந்திப்பில் இது தெளிவாக வெளிப்பட்டது. இதில் கலந்து கொண்ட நூற்றுக்கணக்கான சமூக உறுப்பினர்கள் தங்கள் அக்கறை, விரக்தி, சீற்றம் மற்றும் கவலை என்பவற்றை ஊவுஊ இன் நடவடிக்கைகள் தொடர்பில் வெளிப்படுத்தினர்.

ஏப்ரல் 27, 2023 அன்று, CTC யின் பிரதிநிதி திரு. ராஜ் தவரட்ணசிங்கம் இமயமலைப் பிரகடனத்தில் ("பிரகடனம்) கையெழுத்திட்டார். அதில் தமிழ் மக்கள் மீது, இலங்கை அரசு இழைத்த கொடுமைகளான இனப்படுகொலை, போர்க்குற்றங்கள் அல்லது மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் எவ்வித பொருள்கோடலோ, ஒப்புதலோ, அடையாளப்படுத்தலோ உள்ளடக்கப்படவில்லை. ஈழத்தமிழர்களிடமிருந்து எந்தவித கருத்து உள்வாங்கலோ அல்லது பங்களிப்போ இல்லாமல் குறித்த பிரகடனம் கையெழுத்திடப்பட்டது.

குறித்த பிரகடனம், கட்டமைக்கப்பட்ட இனவழிப்பை நியாயப்படுத்தவும் வரலாற்று ரீதியாக தொடர்ந்த அநீதிகளுக்கான தடயங்களை அழிக்கவும் முயல்கிறது. அதில் தமிழர்கள் குறித்த குறிப்போ அல்லது அவர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிகள் குறித்தோ இல்லாமை இலங்கையை சமத்துவம் மற்றும் பன்மைத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட C3▶




# ஒரு 'சிறிய நகரமாக' மாறி வருகின்ற பல்கலை போராட்டக் கூடாரங்கள்!

கியூபெக், மே 06

ஞாயிற்றுக்கிழமை மொன்றியல் பல்கலைக்கழகத்தின் டவுன்டவுன் வளாகத்தில் உள்ள பாலஸ்தீனிய சார்பு முகாமில் பல கூடாரங்கள் வண்ண மயமான போர்வைகளால் மூடியிருந்தன.

முதல் கனடிய பாலஸ்தீனிய வளாக முகாம் மொன்றியலில் ஆரம்பித்து ஒரு வாரம் கடந்துள்ள நிலையில், டொரன்டோ பல்கலைக்கழகத்திலும் தற்போது கூடாரங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மொன்றியல் முகாம் பல்வேறு மழைப்பொழிவு கூடாரங்கள், ஒரு நூலகம், நன்கொடையாக வழங்கப்பட்ட பொருள்களின் இருப்பு மற்றும் சேற்றைத் தடுக்க தற்காலிக மர நடைபாதைகள் கொண்ட ஒரு 'சிறிய நகரமாக' மாறிவிட்டது என போராட்டக்காரர் ஒருவர் விவரித்துள்ளார்.

பல நாள்கள் மழை பெய்தாலும், தரை சில நேரங்களில் வழுக்கும் குழப்பமாக மாற்றியிருந்தாலும், முகாமில் மன உறுதி அதிகமாக உள்ளது என அவர் கூறியுள்ளார்.



**கனடியத் தமிழர் பேரவைக்கு எதிராக...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு சமூகமாக படம்பிடித்துக் காட்ட முயல்கிறது. இது இலங்கை குறித்த உண்மைத் தன்மைக்கு வெகுவாக அப்பாற்பட்டது.

நிதர்சனத்தில், அடிப்படை உண்மைகளை அங்கீகரிக்காமல், உண்மையான நல்லிணக்கம் என்பது எப்போதும் சாத்தியமாகாது. இத்தகைய அருவருப்பான செயலை நியாயப்படுத்த சிங்களம் என்ற பதமும் பிரகடனத்தில் குறிப்பிடப்படவில்லை என கூறுவது, தமிழர்கள் எதிர்கொண்ட துன்பம் நிறைந்த வரலாற்றை கேலிக்கூத்தாக்குவதாகும். அதேவேளை, குற்றவாளியை பாதிக்கப்பட்டவர்களுடன் சமநிலையில் வைத்திருக்கும் ஒரு முயற்சியாகும்.

குறித்த பிரகடனத்தை ஒரு உடன்படிக்கை அல்ல என ஊவுஊதவறாக வகைப்படுத்துகிறது. எனினும், இந்தப் பிரகடனம் அரசமைப்பு சீர்திருத்தத்தின் அடிப்படையாக இருக்கும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார். இந்நிலை, தமிழ் மக்களுக்கு எதிரான குற்றங்கள் மற்றும் அநீதிகளைத் முற்றாக மறைத்து, நல்லிணக்கத்தை வெறும் வார்த்தை பிரயோகமாக மாத்திரமே வைத்திருக்கும்.

போர்க்குற்றவாளி மஹிந்த ராஜபக்ஷவை ஊவுஊ சந்தித்ததோடு அவருடன் ஒளிப்படமும் எடுத்துக்கொண்டது. கனேடிய அரசாங்கம் மஹிந்த ராஜபக்ஷவுக்குத் தடை விதித்துள்ளது. இருப்பினும், CTC, தடையை பொருளாதார தடையாக மட்டுமே வகைப்படுத்துகிறது. இது போன்ற தடைகளின் நோக்கத்தையும், அர்த்தத்தையும் புரிந்துகொள்ளவோ அல்லது கண்டுகொள்ளவோ இயலாத நிலையில் ஊவுஊ தனது பார்வைப் புலனை இழந்துள்ளது. இந்தத் தடை பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கலாம் இருப்பினும், அத்தகைய தடைகளின் நோக்கங்கள் எப்போதும் முற்றிலும் அரசியல் சார்ந்தவையே. இந்தத் தடையை வெறுமனே பொருளாதாரத்துடன் தொடர்புடையது என வகைப்படுத்துவது கபடத்தனமானதும், பயங்கரமானதுமாகும்.

புதிய உறுப்பினர்களின் இணைப்புக்கான கோரிக்கைகளை CTC தொடர்ந்து புறக்கணித்து வருகிறது. தற்போது, உறுப்பினர் இணைப்பு என்பது தேர்ந்தெடுக்கப்பட்ட தனிநபர்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. உறுப்பினர் இணைப்புக் குறித்த முடிவுகள், முற்றிலும் தன்னிச்சையானவையாக உள்ளன. இது எந்தவிதமான ஜனநாயக கோட்பாடுகள், பொறுப்புக்கூறல், சட்டத்தின் ஆட்சி அல்லது வெளிப்படைத்தன்மையற்ற ஒரு முறையாகும். தமது முடிவுகள் உறுப்பினர்களின் ஆதரவை அடிப்படையாகக் கொண்டவை என்பதை CTC தொடர்ந்து வலியுறுத்துகிறது. இருப்பினும், உறுப்பினர் அனுமதி என்பது, தமக்கு இணக்கமான குறிப்பிட்ட எண்ணிக்கையிலான தெரிவு செய்யப்பட்ட தனிநபர்களுக்கானது என்ற நிலை அவமானகரமானதும், அபாயகரமானதும் ஆகும்.

இந்த அணுகுமுறை சுதந்திரமாகக் கருத்துக்கூற முடியாமை மற்றும் உண்மையான விருப்பத்தை வெளிப்படுத்த முடியாத நிலையை உருவாக்கி, தமிழர்களைத் தோல்வியுறச் செய்கிறது. இத்தகைய அநீதியை எதிர்க்கும் ஊடகவியலாளர் அல்லது சமூக உறுப்பினர்களுக்கு எதிராக அவதூறு சட்டத்தை ஊவுஊ தொடர்ந்து ஆயுதமாகப் பயன்படுத்துகிறது. இது பேச்சு சுதந்திரம் மற்றும் பொதுப் பங்கேற்பை மௌனமாக்கும் ஒரு நகர்வாகும்.

இறுதியாக, தமிழர்களுக்கு எதிராக எந்த விதமான இனப்படுகொலையும் நடைபெறவில்லை என்பதை CTC தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. இது உலகின் அனைத்து மூலைகளிலும் உள்ள தமிழர்கள் நிராகரித்துக் கண்டிக்கும் ஒரு நிலைப்பாடாகும். CTC யின் தொடரும் இனப்படுகொலை மறுப்பும், அதனை நியாயப்படுத்துதலும், பாதிக்கப்பட்டவர்களையும் அவர்களின் குடும்பங்களையும் அவமானப்படுத்துவதாகும். நடைபெற்ற இனப்படுகொலை என்பது தமிழர்களை மீள முடியாத துயரில் தொடர்ந்தும் வைத்துள்ளது.

தமிழர்களைப் பிரதிநிதித்துவப் படுத்துவதாகக் கூறும் CTC இதனை மறுப்பது, இந்தத் துயரையும் அழிவையும் தொடர ஏதுவாக்குகிறது. அத்தகைய ஒரு நிலைப்பாடு, இழந்த உயிர்களைப் பெரிதும் அவமதிப்பதோடு, அவர்களின் சாம்பல்களையும், கல்லறைகளையும் இழிவுபடுத்துவதற்குச் சமமானதாகும்.

இந்தத் தருணத்தில், ஈழத் தமிழர்கள் அல்லது கனேடியத் தமிழர்களை பிரதிநிதித்துவப்படுத்தவோ, அல்லது “தமிழர்களின் குரல்“ எனத் தம்மைப் பகிரங்கமாக அடையாளப்படுத்தவோ, தார்மீக மற்றும் அதிகாரத்தை CTC இழக்கிறது.

எனவே, CTC கண்டிப்பாக:-

■ பிரகடனத்தில் இருந்து பகிரங்கமாக விலக வேண்டும். இது போன்ற நிலை மீண்டும் நடைபெறாமல் இருக்க, இந்த மாபெரும் தவறுக்கு வழிவகுத்த முடிவெடுக்கும் செயல்முறையை வெளிப்படுத்துவதுடன், ஈழத் தமிழர்களிடமும், உலகெங்கிலும் உள்ள தமிழர்களிடமும் நேரடியாக மன்னிப்புக் கோரவேண்டும். கூட்டின் மக்கள் சந்திப்பு நடைபெற்ற மார்ச் 23, 2024 அன்று வெளியான CTC இன் அறிக்கை எந்த தவறுக்கும் பொறுப்பேற்கவில்லை. மாறாக, அது பிரகடனத்தில் இருந்து CTCயை விலத்தி வைக்க முயற்சிக்கிறது. அல்லது தனக்கான பொறுப்பிலிருந்து தன்னை விடுவிக்க முயற்சிக்கிறது. பிரகடனம் கடுமையாகக் கண்டிக்கப்பட்டு மீள முடியாத தாக்கத்தை ஏற்படுத்திய நிலையில், CTC யின் இந்த நிலைப்பாடு பொறுப்பானதோ அல்லது ஏற்றுக் கொள்ளத்தக்கதோ அல்ல.

■ நேரடியாகப் பாதிக்கப்பட்ட மக்களின் அர்த்தமுள்ள ஈடுபாட்டுடன் ஈழத் தமிழர்கள் மற்றும் கனேடியத் தமிழர்களுக்கான அரசியல் பரப்புரைகளை முன்னெடுப்பதுடன் –

■ கனேடியத் தமிழர்களின் உண்மையான ஆணையை பெற்று, அவசியமான சீர்திருத்தம் நிகழும் வரை CTC அமைப்பானது, கனடா, அமெரிக்கா, இலங்கை அல்லது வேறு எந்த நாடுகளுடனோ அல்லது அவற்றின் அதிகாரிகள் மற்றும் பிரதிநிதிகளுடனோ அனைத்து தொடர்புகளையும் நிறுத்த வேண்டும். இலங்கை மற்றும் பிற அரச அதிகாரிகளுடன் கனேடியத் தமிழர்களின் கருத்துக்கள் பெறப்படாமல் அல்லது அவர்களின் ஆணை எதுவுமின்றி, வரலாற்று ரீதியாக வெளிப்படைத்தன்மையற்ற பல சந்திப்புகளை CTC நடத்தியுள்ளது. அத்தகைய ஓர் அணுகுமுறை தொடர்வதை ஏற்றுக்கொள்ள முடியாது. இறுதியாக, CTC தன் மீதான நம்பிக்கையை பெருமளவு இழந்துள்ளதை கருத்தில் கொண்டு, ஈழத் தமிழர்கள் மற்றும் கனேடியத் தமிழர்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கும் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதல்களை வழங்கி, அடுத்தகட்ட நடவடிக்கைகளை தீர்மானிக்க உதவும் முகமாக, ஏப்ரல் 18, 2024க்குள் சமூக உறுப்பினர்களைக் கொண்ட ஒரு நிரந்தர நிலைக்குழுவை நிறுவுவதற்கான செயல்முறையை CTC ஆரம்பிக்க வேண்டும் என “கூட்டு” அழைப்பு விடுகிறது.

தொலைபேசி: (+1) 647-560-7013

மின்னஞ்சல்: canadiantamilcollective@gmail.com

– என்று உள்ளது.

**ஈழவேந்தனின்...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் உறுப்பினராக ஈழவேந்தன் தனது 72வது வயதிலேயே நாடாளுமன்றத்திற்கு தெரிவுசெய்யப்பட்டிருந்தார்.

1932 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 14 ஆம் தேதி பிறந்த கனகேந்திரன் என்ற இயற்பெயர் கொண்ட அவர் தனது பெயரை ஈழவேந்தன் என மாற்றினார்.

தமிழீழக் கொள்கைகளில் தீவிர ஆதரவாளராகச் செயற்பட்ட ஈழவேந்தன் 2001 ஆம் ஆண்டு இந்தியாவில் தமிழகத்தில் இருந்து இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டிருந்தார்.

இந்நிலையில், தொடர்ந்து மூன்று மாதங்களுக்கு மேலாக நாடாளுமன்றத்துக்குச் செல்லாத காரணத்தினால் அவரது நாடாளுமன்ற உறுப்பினர் பதவி 2007 நவம்பரில் பறிபோனது.

இதையடுத்து, இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்து கனடாவில் குடியேறியிருந்த நிலையில், ஏப்ரல் 28, 2024 டொரன்டோவில் அமைந்துள்ள வைத்தியசாலையில் உடல்நலக் குறைவால் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் உயிரிழந்தார்.

**கார் - ரயில்...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஹம்பர் ஸ்டேஷன் வீதியில் மாலை 5 மணிக்குப் பின்னர் இந்த விபத்து இடம்பெற்றதாக ஒன்ராறியோ மாகாண பொலிஸார் தெரிவித்தனர்.

20 வயதுடைய பெண் ஒருவர் கடுமையான காயங்களுடன் டொராண்டோ அதிர்ச்சி மையத்திற்கு ஹெலி மூலம் கொண்டு செல்லப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

விபத்துக்குள்ளான காரில் அச்சமயம் சாரதி மட்டுமே இருந்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

# அடிக்கடி அரசியல் சர்ச்சையை வெளிப்படுத்தும் வங்கி ஆளுநர்

ஒன்ராரியோ, மே 06

'பாங்க் ஒவ் கனடா' ஆளுனர் டிஃப் மாக்லெம், நாடாளுமன்ற நிதிக் குழுவின் முன் சாட்சியமளிக்கும் ஒவ்வொரு முறையும் ஓர் அரசியல் சர்ச்சையை வெளிப்படுத்திவிடுகிறார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆண்டுக்கு நான்கு முறை, நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிதியியல் கொள்கை குறித்து ஆளுநரிடம் கேள்வி கேட்கும் வாய்ப்பைப் பெறுகின்றனர்.

பணவீக்கம் மற்றும் வட்டி விகிதங்கள் இரண்டும் அதிகமாக இருக்கும் நேரத்தில், நாடாளுமன்ற உறுப்பினர்கள் குறிப்பாக எதிர்க்கட்சிகள் –



மத்திய அரசு அதிக செலவு செய்கிறதா? கார்பன் விலை எவ்வளவு விலையை உயர்த்துகிறது? அதை நீக்குவது வட்டி விகிதங்களைக் குறைக்குமா? போன்ற அரசியல் ரீதியாக தூண்டப்பட்ட பிரச்சினைகள் குறித்து அவரிடம் கேட்க ஆர்வமாக இருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பணவீக்கத்தின் மீதான நிதிக் கொள்கையின் தாக்கங்கள் அடிப்படையில் ஆளுநர் இதற்கான தனது பதில்களை கவனம் செலுத்துகிறார்.

ஆனால் ஆளுனரின் சிறந்த முயற்சிகள் இருந்தபோதிலும், அவரது வார்த்தைகள் பெரும்பாலும் அரசியல்வாதிகளால் அவர்களின் சொந்த விவரிப்புகளுக்கு பொருந்தக்கூடிய வகையில் பயன்படுத்தப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

# மூலதன ஆதாய வரிவிதிப்பு விவகாரம்: கன்சர்வேடிவ் தெளிவான முடிவில்லை

ஒன்ராரியோ, மே 06

கன்சர்வேடிவ் தலைவர் பியர் பொலிவே, லிபரல் அரசாங்கத்தின் மூலதன ஆதாய வரிவிதிப்புக்கு முன்மொழியப்பட்ட மாற்றங்களுக்கு வரும்போது, வணிகத் தலைவர்களிடம் தங்கள் சொந்தப் போராட்டங்களை நடத்துமாறு தெரிவித்துள்ளார்.

எனினும், கன்சர்வேட்டிவ் கட்சி, மூலதன ஆதாய வரிவிதிப்புக்கு ஆதரவாக வாக்களிக்குமா இல்லையா என்பது பற்றி அவர் இது வரை கருத்து வெளியிடவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நிதியமைச்சர் கிறிஸ்டியா ஃப்ரீலேண்ட் கடந்த வாரம் இந்த சட்டத்தை அறிமுகப்படுத்தினார்,

அதற்குப் பதிலாக, வரி முறையைப் புதுப்பிப்பதற்கான ஒரு தனி சட்ட மூலத்தை அரசாங்கம் தாக்கல் செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது,

எனவே செல்வந்த கனடியர்கள் மற்றும் வணிகங்கள் தங்கள் இலாபத்தில் அதிக பங்கிற்கு வரி செலுத்துவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதாவது ஒவ்வொரு கட்சியும் ஆம் அல்லது இல்லை என வாக்களிப்பதன் மூலம் தெளிவான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும்.

பொதுக் கருத்துக் கணிப்புகள்



இளைய கனடியர்கள் கன்சர்வேடிவ்களுக்கு அதிகளவில் ஆதரவளிப்பதைக் காட்டுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தவறான திசையில் பயணித்தமையால் மில்டன் பகுதியில் விபத்து பெண் பலி




ஒன்ராரியோ, மே 06

மில்டன் பகுதியில் ஞாயிற்றுக் கிழமையன்று நெடுஞ்சாலை 401 இல் ஒரு சாரதி தவறான திசையில் பயணித்தமையால் ஏற்பட்ட விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மற்றொருவர் உயிருக்கு ஆபத்தான நிலையில் உள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதிகாலை சுமார் 3:30 மணியளவில் குல்ப் லைனில் கிழக்கு நோக்கிய பாதையில் நெடுஞ்சாலை 401இல் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மில்டனைச் சேர்ந்த 28 வயது டைய பெண் ஒருவர் கிழக்கு நோக்கிய பாதையில் மேற்கு நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்தபோது, பிராம்ப்டனைச் சேர்ந்த 22 வயது ஆண் ஒருவர் ஓட்டிச் சென்ற செடான் வாகனத்தில் மோதியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இரு சாரதிகளும் வாகனங்களில் தனியே பயணித்தனர். பெண் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் எனவும், ஆண் உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.